பதிவஞ்சலின் மூலம்

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

<u>ஆணை நாள் 25.09.2019</u>

**<u>முன்னிலை</u>**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 98/B/2018</u>**

திரு.வை.மணிவண்ணன் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சேலம் — பொது அதிகார அமைப்பு

## <u>ஆணை</u>

இந்த விசாரணையானது இவ்வாணையத்தால் ஏற்கனவே 18.07.2019 அன்று நடத்தப்பட்ட விசாரணையின் தொடர்ச்சியாக இன்று (25.09.2019) நடத்தப்படும் மறுவிசாரணையாகும். இன்றைய மறுவிசாரணைக்கு மனுதாரர் திரு.வை.மணிவண்ணன் அவர்கள் ஆஜரானார். திரு. என். வல்லமுனியப்பன், வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், சேலம் மாவட்டம் மற்றும் பொதுத் தகவல் அலுவலர், திருமதி. கமலம், வேளாண்மை துணை இயக்குநர், மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை அலுவலகம், சேலம் மாவட்டம் ஆகியோர் இன்றைய விசாரணைக்கு ஆஜரானார்கள்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 30.08.2017 தேதியிட்ட மனுவில், மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் கீழ் தாரமங்கலம் ஒன்றிய நீர்வடிப்பகுதியில் மொத்தம் உள்ள தொகுதிகள் எண்ணிக்கை மற்றும் தொகுதியின் பெயர்கள் கேட்டும், அமரகுந்தி, மல்லிகுட்டை நீர்வடிப்பகுதி தொகுதியில் உள்ள மொத்த

கமிட்டிகளின் விவரங்கள், கமிட்டி தலைவர் மற்றும் கமிட்டி உறுப்பினர்கள் ஆவதற்கு தேவையான தகுதிகளின் விவரங்கள், ஒவ்வொரு கமிட்டியிலும் உள்ள உறுப்பினர்கள் எண்ணிக்கை விவரங்கள், மேலும் இது சம்பந்தமாகவே 17 இனங்களில் தகவல் கோரி சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு மனு செய்துள்ளார். தமக்கு தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர், தான் கோரியுள்ள தகவல்களை தனக்கு பெற்றுத் தருமாறு தெரிவித்து 09.10.2017 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பி வைத்துள்ளார். மேல்முறையீட்டு மனுவிற்குப் பின்னும் தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர் 02.01.2018 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (18.07.2019) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, வழக்கின் மறுவிசாரணை கீழ்க்கண்ட ஆணைகளுடன் மறுதேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டிருந்தன:-

> "மனுதாரரின் 30.08.2017 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனு மற்றும் பொதுத் தகவல் அலுவலர் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை அலுவலகம் கொடுத்த 17.01.2018 மற்றும் 17.07.2019 தேதியிட்ட தகவலின் நகல்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்பட்டிருந்தது. மேற்படி மனுக்கள் மீது சேலம் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள், வட்டாட்சியர், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் / பொதுத் தகவல் அலுவலர், மற்றும் மனுதாரரையும் விசாரணைக்கு அழைத்து, விசாரணை மேற்கொண்டு, விசாரணை அறிக்கையின் நகலை மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து, விசாரணை அறிக்கையுடன் மனுதாரர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலை இணைத்து, சேலம் மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் மூலம் இவ்வாணையத்தில் நடைபெறும் மறுவிசாரணையன்று நேரிடையாக ஆஜராகி சமர்ப்பிக்க ஆணையம் உத்தரவிட்டிருந்தது".

3. 18.07.2019 நாளிட்ட ஆணை பத்தி 5(1)ன்படி, திரு இரா. திவாகர், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் 24.09.2019 தேதியிட்ட விளக்க அறிக்கையினை சமர்ப்பித்தார். அவருடைய விளக்க அறிக்கையை ஆணையம் ஏற்றுக் கொண்டு, மீண்டும் (25.09.2019) இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு 24.09.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக தகவல்கள் நேரிடையாக வழங்கப்பட்டதாகத் தெரிவித்து, தகவலின் நகல் மற்றும் மனுதாரர் கையெழுத்திட்டு பெற்றுக் கொண்ட நகலை ஆணையத்தில் சார்வு செய்தார்.

4. இன்றைய விசாரணையில் மனுதாரர் நேரில் ஆஜராகி, தனக்கு வழங்கப்பட்ட தகவல்கள் திருப்தி என்று தெரிவித்தார். ஆவணங்கள் அடிப்படையில் மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதால், வழக்கின் விசாரணை முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**

**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 98/B/2018</u>**

மாவட்ட வருவாய் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சேலம்

பொதுத் தகவல் அலுவலர்/
வேளாண்மை துணை இயக்குநர்,
மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை,
மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை அலுவலகம்,
சேலம் மாவட்டம்

திரு.வை.மணிவண்ணன்,
த/பெ.வைத்தியலிங்கம்,
6-96A மாங்குட்டப்பட்டி,
அமரகுந்தி (அஞ்சல்),
ஓமலூர் வட்டம்,
சேலம் மாவட்டம் - 636 503

Copy to: File / Stock File
SC/PA/30.09.2019